ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2494/03 - 2026 ජූනි මස 22 වැනි සඳුදා - 2026.06.22

2494/03 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயம்) 66அ(1)(அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்**

**வெலிகம பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

வெலிகம பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்,

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ் வெலிகம பிரதேச சபையின் இலக்கம் 25 தல்அரம்ப வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட திரு. லியனகே ரோஹன குமார லமாஹேவா என்பவர் அங்கம் வகிக்கின்ற தேசிய மக்கள் சக்தி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் சுட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேரந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவருமான வெலிகம் பிரதேச சபையின் இலக்கம் 25 தல்அரம்ப வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. கங்கபட ஆரச்சிகே நோமன் சந்திரிக என்பவரைப் பெயர்குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்,

வெலிகம பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் புலஸ்தி சேரசிங்ஹ பதிரண ஆகிய நான் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு திரு. கங்கபட ஆரச்சிகே நோமன் சந்திரிக என்பவர் வெலிகம பிரதேச சபையின் இலக்கம் 25 தல்அரம்ப வட்டாரத்திற்கு உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**பீ.எஸ் பதிரண,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
வெலிகம பிரதேச சபை.

**மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,**
**மாத்தறை.**
**2026 யூன் மாதம் 22 ஆம் திகதி.**

EOG - 06 - 0258